**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 05–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | –திரு.சிவபாலன் | **PW–71** | தொழில் | – |
| த/க பெயர் | – | | வயது | – |
| கிராமம் | – | | தாலுக்கா | – |

**(எதிரிகள் ஆஜர் இல்லை, ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.)**

<u>முதல் விசாரணை:</u>–

நான் கடலூர் மாவட்டம், பத்திரக்கோட்டை என்னுடைய சொந்த ஊர் ஆகும். தற்போது சென்னையில் குடியிருந்து நகராட்சி நிர்வாக இயக்குனரகத்தில் கண்காணிப்பாளராக பணியில் உள்ளேன். நான் 2009 ஆம் ஆண்டு பி.சி.ஏ படித்து முடித்தேன். 2011 ஆம் ஆண்டு எம்.பி.ஏ முடித்தேன். 2011 ஆம் ஆண்டு முதல் டிஎன்பிஎஸ்சி தேர்வுகள் எழுதுவதற்கு என்னை தயார் படுத்தி வந்தேன். நான் 2013 ஆம் ஆண்டு நடந்த டிஎன்பிஎஸ்சி குரூப் 4 எக்ஸாம் எழுதி அதில் தேர்ச்சி பெற்று 16.06.2014 தேதி முதல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனரகம் வேலூர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தேன். என்னுடைய கைபேசி எண் 9442808639 இந்த கைபேசி எண்ணை 2011

ஆம் ஆண்டு முதல் தற்போது வரையில் பயன்படுத்தி வருகிறேன். அதன் சர்வீஸ் ப்ரொவைடர் பிஎஸ்என்எல் ஆகும். 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற குரூப் 2 தேர்வு வினாத்தாள் ஈரோடு மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் வெளியீடானது சம்பந்தமாக என்னை கோயம்புத்தூர் சிபிசிஐடி துணை கண்காணிப்பாளர் விசாரித்தார்.

**1-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-** இல்லை.

**4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22 முதல் 24, 26 முதல் 30-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

9442808639 என்ற கைபேசி எண்ணில் கால் டீடெயில்ஸ் எதுவும் வைத்து டிஎஸ்பி என்னை விசாரிக்கவில்லை என்றால் சரி.

**4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22 முதல் 24, 26 முதல் 30-ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 2, 3, 10, 13, 14, 15, 16, 20, 21, 17 மற்றும் 25-ம் எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

Chief Judicial Magistrate,
Erode.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 05–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் –திரு.ரவிச்சந்திரன் **PW–72** தொழில் –

த/க பெயர் – வயது –

கிராமம் – தாலுக்கா –

**(எதிரிகள் ஆஜர் இல்லை, ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.)**

**முதல் விசாரணை:–**

நான் கடலூர் மாவட்டம் வானமாதேவி கிராம நிர்வாக அலுவலராக பணியில் உள்ளேன். நான் 2001 ஆம் வருடம் பி.ஏ படித்தேன். 2003 ஆம் ஆண்டு எம்.ஏ படித்தேன். நான் 1999 ஆம் ஆண்டு முதல் டிஎன்பிஎஸ்சி தேர்வுகளுக்காக கடலூரில் உள்ள ரகுபதி என்பவர் நடத்தும் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றேன். 2000 ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையில் டிஎன்பிஎஸ்சியில் நடைபெற்ற குரூப் 2, குரூப் 4, குரூப் 8 ஆகிய தேர்வுகள் எழுதினேன். 20.02.2011 ஆம் ஆண்டு நடைபெற்ற டிஎன்பிஎஸ்சி விஏஓ தேர்வில் நான் தேர்ச்சி பெற்றேன். 11.04.2012 ஆம் தேதி சிதம்பரம் வட்டம் வடஹரிராஜபுரம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் சேர்ந்தேன். 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற

டிஎன்பிஎஸ்சி குரூப் 4 தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றேன், நான் அந்த பணியில் சேரவில்லை. 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற டிஎன்பிஎஸ்சி குரூப் 2 தேர்வு எழுதுனேன். அந்த தேர்வு ரத்தானதால் அதற்காக நடத்தப்பட்ட மறு தேர்வை நான் எழுதினேன், ஆனால் நான் தேர்ச்சி பெறவில்லை கடந்த 18 வருடங்களாக 9597146259 ஏர்டெல் கைபேசி எண்ணை பயன்படுத்தி வருகிறேன், தற்போது வரையில் மேற்படி கைபேசி தான் பயன்படுத்தி வருகிறேன். 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற டிஎன்பிஎஸ்சி குரூப் 2 தேர்வின் வினாத்தாள் தர்மபுரி மற்றும் ஈரோடு ஆகிய பகுதிகளில் தேர்வுக்கு முன்னே வெளியானது சம்பந்தமான வழக்கில் என்னை கோயம்புத்தூர் சிபிசிஐடி துணை கண்காணிப்பாளர் விசாரித்தார்.

**<u>1-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>** இல்லை.

**<u>4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22 முதல் 24, 26 முதல் 30-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

9597146259 என்ற கைபேசி எண்ணில் கால் டீடெயில்ஸ் எதுவும் வைத்து டிஎஸ்பி என்னை விசாரிக்கவில்லை என்றால் சரி.

**4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22 முதல் 24, 26 முதல் 30-ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 2, 3, 10, 13, 14, 15, 16, 20, 21, 17 மற்றும் 25-ம் எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

Chief Judicial Magistrate,
Erode.